# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 158 — 1975 අප්‍රේල් 04 වැනි සිකුරාදා — 1975.04.04

158 ஆம் இலக்கம் — 1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 04 ம் திகதி, வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II ஆ)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 353 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | — |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் | 356 | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | — | ஏல விற்பனைகள் | — |
| ஆய விற்பனையும் குத்தகை விற்பனையும் | 356 | நானாவித அறிவித்தல்கள் | — |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவுக்கு. திருகோணமலை துறைமுக அபிவிருத்தி வேலைத்தளம் (சீனக்குடா) என்னுமிடத்தில் ஆற்றுமணல், கருங்கல் ஆகிய வற்றை கேள்விப்பத்திர சாதனங்களுடன் இணைக்கப்பட்டுள்ள கணியப்பட்டியலில் குறிப்பிட்டது போல் வழங்குவதற்கும் ஒப்படைப்பதற்குமான கேள்விப் பத்திரங்களைக் கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு கேள்விச் சபைத் தலைவர் 1975 சித்திரை 24 ம் திகதி பிற்பகல் 2.30 மணி வரை ஏற்றுக்கொள்வார். 1975 சித்திரை 24 ம் திகதி பிற்பகல் 2.45 மணியளவில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் பொழுது கேள்வியாளர்கள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

கேள்விப் பத்திரங்களைப் பதிவுத் தபாலில் அனுப்ப விரும்பாத கேள்வியாளர்கள் கேள்விச் சபைத் தலைவரால் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரிடம் கேள்விப் பத்திரங்களை நேர்முகமாகக் கொடுத்து அவைகளை அவர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புக் கூற்றை எழுத்து மூலம் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளவேண்டும். அல்லது அவர் நேர் முகமாக வந்து தங்களின் கேள்விப் பத்திரங்களை இத்திணைக்கள கேள்விப் பத்திரப் பெட்டியில் சேர்ப்பித்தல் வேண்டும்.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு அலுவலகத்தில் கேள்வி சம்பந்தமான சாதனங்களைப் பார்வையிடலாம். கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100/- கொழும்பிலுள்ள கப்பற்றுறை ஆணைக்குழு சிறுப்பர் வழங்கிய பற்றுச் சீட்டுடன் கொழும்பு கப்பற்றுறை ஆணையாளருக்கு விண்ணப்பஞ் செய்வோருக்குக் கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும். கேள்வி வைப்புப் பணம் கேள்வி நிபந்தனைகளுக்கேற்ப திருப்பிக் கொடுக்கப்படும்.

மேலே குறிப்பிட்ட பிரகாரம் பெற்றுக் கொள்ளப்படும் படிவங்களில் கேள்விப் பத்திரங்கள் இருத்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான சாதனங்கள் 1975 சித்திரை 23 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும்.

எல். எஸ். த சில்வா,
கப்பற்றுறை ஆணையாளர்.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1,
24.03.1975.

4-40—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

### முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எச். டபிள்யூ. பி. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சகத் திணைக்களம்,
கொழும்பு,
1973 ம் ஆண்டு டிசெம்பர் மீ 18 ந் உ.

அஞ்சல் தொலைத்தொடர்புத் திணைக்களம்

தபால்களைக் கொண்டு செல்வதற்கான கேள்விப்பத்திரம்

வவுனியா அஞ்சல் அலுவலகத்துக்கும், வவுனியா புகையிரத நிலையத்திற்கும் இடையில், ஞாயிற்றுக்கிழமையில் வவுனியா புகையிரத நிலையத்திலிருந்து வவுனியா அஞ்சல் அலுவலகத்துக்கு தபால் கொண்டு செல்லும் பயணத்தைத் தவிர்ந்த ஏனைய எல்லா நாட்களிலும் நாளொன்றுக்கு ஒவ்வொரு முறை 1975 ம் ஆண்டு மே மாதம் 1 ம் திகதி தொடக்கம் இரண்டு வருடத்துக்கு, இரட்டை மாட்டு வண்டி மூலம் (வண்டியில் அளவு பின்வரும் பரிமாணங்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும். நீளம் 6' 9" அகலம் 6' 0" உயரம் 6' 6") தபால் கொண்டு செல்வதற்கும் திரும்ப எடுத்து வருவதற்குமான கேள்விப்பத்திரங்கள், 1973 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 6 ம் திகதி முற்பகல் 10.00 மணிவரை, கொழும்பு 1, அ. அ. அலுவலகம், அஞ்சல் தொலைத்தொடர்புத் திணைக்கள கேள்விப்பத்திரச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் அஞ்சல் அதிபதிக்கு விண்ணப்பித்து பெற்றுக்கொண்ட பத்திரங்களில் அனுப்பப்படல் வேண்டும். அஞ்சல் அதிபதியிடமிருந்து இவ்விடயம் சம்பந்தமான எல்லா விபரங்களும் அறிந்துகொள்ளலாம். அஞ்சல் அலுவலகத்தில் கேள்விப்பத்திரப் பொறுப்புப் பணமாக 10 ரூபா கட்டிப்பெறும் பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பவர்களுக்கே கேள்விப்பத்திர விண்ணப்பப்பத்திரம் 1975 ஆண் ஆண்டு மே மாதம் 09 ம் திகதி நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும்.

ஏ. ஆர். எம். ஜயவார்த்தன,
அஞ்சல் அதிபதியும் தொலைத்தொடர்புப் பணிப்பாளரும்.

அஞ்சல் அதிபதியின் அலுவலகம்,
அ. தொ. தலைமை அலுவலகக் கட்டடம்,
டியூக் வீதி,
கொழும்பு 1.

4–78—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

ஊவா மாகாண கீழ்ப்பிரதேச அபிவிருத்தி வேலைகள்

ஊவா மாகாண கீழ்ப்பிரதேசத்திலுள்ள குளங்களைத் திருப்பிக் கட்டுவதற்கு பாவிக்கக்கூடிய மண் அகற்றும் இயந்திரங்கள் இலங்கைப் பிரசைகளிடம் இருந்தும், இலங்கைத் தாபனங்கள் கூட்டுறவுச் சங்கங்களிடம் இருந்தும் பண்டாரவளையில் உள்ள ஊவாப்பிரதேச வேலைகள் அத்தியட்சகரால் கீழ்க்குறிப்பிட்ட வேலைகளைச் செய்வதற்காய கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| வேலைகளின் விபரம் | பிரமாணம் வீதம் |
|---|---|
| அ. (1) சுலபமான காடுகளை வெட்டி வேர்புடுங்குதலும் துப்பரவு செய்தலும் .. | ஏக்கர் |
| (2) வேண்டிய பிரகாரம் 7 அடி (கீழ்) சுற்றளவுள்ள மரங்களைத் தவிர்ந்த மத்திமமான காடுகளை வெட்டி வேர் புடுங்குதலும் துப்பரவு செய்தலும் .. .. | ஏக்கர் |
| (3) வேண்டிய பிரகாரம் 7 அடி (கீழ்) சுற்றளவுள்ள மரங்களைத் தவிர்ந்த அடர்த்தியான காடுகளை வெட்டி வேர்புடுங்குதலும் துப்பரவு செய்தலும் .. .. | ஏக்கர் |
| (4) குளக்கட்டுகளிலும், வாய்க்கால் அணைக்கட்டுகளிலும் ரோட்டிலும் ½ மைல் தூரத்துக்குள் இருந்து மண்ணைக் கொண்டுவந்து படிப்படியாக இறுக்குதல். அங்கீகாரத்துக்கமைய ஒன்றுசேர்த்தல். தண்ணீர் இட்டு இறுக்குதல் .. .. | கனஅடி |
| (5) மேற்காட்டியுள்ள 4 ஆம் பிரிவில் குறிப்பிடுள்ள அங்கீகரிக்கப்பட்ட குளங்கள் முதலிய வற்றிற்கான மண்வேலை ஏற்றி இறக்கல் ½ மைலுக்கு மேலும் ½ மைலுக்கு உட்பட்டதாகவும் இருக்க வேண்டும் .. | கனஅடி |
| (6) மேற்காட்டியுள்ள 4 ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட குளங்கள் முதலியவற்றிற்கான மண்வேலை. ஏற்றி இறக்கல் ½ மைலுக்கு மேலும் ¾ மைலுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும் .. | கனஅடி |
| (7) மேற்குறிப்பிட்டுள்ள 4 ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட குளங்கள் முதலியனவற்றிற்கான மண்வேலை ¾ மைலுக்கு மேலும் 1 மைலுக்கு உட்பட்டதாகவும் இருக்க வேண்டும் .. .. | கன அடி |
| (8) 0 மைலில் இருந்து ½ மைல் தூரத்துக்குட்பட்ட தூரத்துக்குள் மென்மையான கற்பாறைகளைப் பரவுதல் உட்படுதலாக தோண்டுதல் | |
| உயர்த்துதல் : (1) 0 அடி–5அடிவரை .. | கனஅடி |
| (2) 5 அடி–10 அடிவரை | கனஅடி |
| (3) 10அடி–15 அடிவரை | கனஅடி |
| (9) 0 மைலில் இருந்து ½ மைலுக்குட்பட மென்மையான பாறைகளைப் பரவுதல் உட்படுத்லாக தோண்டுதல். உயர்த்துதல் 15 அடிக்கு மேல் .. .. | |
| (10) வெடிவைத்து கடினமான பாறைகளை அகற்றி ஒழுங்கு நிரல்கள் ஆக்கல். இதற்குரிய கூலிகளைக் கொடுத்தல் ஒழுங்கு நிரல் படுத்தப்பட்ட நிரல்களைக் பொறுத்ததாகும் .. | |
| உயர்த்துதல் :(1) 0 அடி– 5 அடிவரை | கனஅடி |
| (2) 5அடி–10 அடிவரை .. | கனஅடி |
| (3) 10அடி–15 அடிவரை .. | கனஅடி |
| (4) 15அடி–15அடிக்குமேல்.. | கனஅடி |
| (11) வேண்டியபிரகாரம் 12 அங்குல கன மேல் மண்ணை அகற்றிப் பிரயோகித்தல் .. | கனஅடி |
| (12) பிளவுகளில் இருந்து கழிவுகளையும், மேலெழுந்தவைகளையும் அகற்றிப் பிரயோகித்தல் | கனஅடி |
| (13) வான்வழிக்கும் கழிவுவிரயத்திற்கும் வேண்டியவற்றை அகற்றல். அப்புறப்படுத்தல் ½ மைலுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் | |
| (14) முக்கிய ஆழியை வெட்டுதலும் கழிவுப் பொருட்களை வேண்டிய பிரகாரம் பிரயோகித்தலும் அப்புறப்படுத்தலும். அப்புறப்படுத்தல் ½ மைலுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும் .. .. | கனஅடி |

ஆ. கேட்கப்படும் விகிதம் இப்பகுப்பவர்களுடைய சம்பளத்தையும், எரிபொருள்களின் விலையையும், ஏற்றுமதி இறக்குமதியையும் அடக்கியுள்ளதாக இருத்தல் வேண்டும்.

இ. உங்கள் கேள்விகளை 1 வது பந்தியில் குறிப்பிட்டுள்ள வேலைக்கு கீழ்க்கையொப்பம் இட்டிருப்பவருக்கு 28.4.75 நண்பகல் 12 மணிக்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக தயவு செய்து சமர்ப்பிக்கவும்.

ஈ. தபால் உறையின் மேல் மூலையில் கீழ்க்குறிப்பிட்டவாறு எழுதுதல் வேண்டும். (எல். யூ. டீ. பீ. வேலைகள் கேள்விப்பத்திரம்)

மேலதிக தகவல்களை பண்டாரவளை வேலைகள் அத்தியட்சகர் காரியாலயத்தில் கடமையாற்றும் மொனராகலை மாவட்ட வேலைகள் அத்தியட்சகரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

என். ஜீ. தாமோதரம்,
வேலைகள் அத்தியட்சகர் (ஊவா பிரதேசம்).

வேலைகள் அத்தியட்சகர் அலுவலகம்,
பண்டாரவளை,
1975 ம் ஆண்டு மார்ச்சு மீ 21 ந உ.

4–8—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

### கடற்றொழில் திணைக்களம்

45, கடற்கரை வீதி, நீர்கொழும்பிலுள்ள கட்டடத்தில் மோட்டார் மடுவமொன்றை அமைப்பதற்கும் முட்டகம்பி வேலியிடுவதற்குமான கேள்விப் பத்திரங்களை '75.04.18 ஆந் தேதி முற்பகல் 10.30 மணி வரை கடற்றொழில் பணிப்பாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 3, காலிமுகத்திலுள்ள கடற்றொழில் திணைக்களத்தின் தாபனக் கிளையிலிருந்து 75.04.17 ந் திகதி நண்பகல் 12 மணிவரை மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100/- ச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. ஐ. முகைதீன்,
கடற்றொழில் பணிப்பாளர்.

கடற்றொழில் திணைக்களம்,
காலிமுகம்,
கொழும்பு 3, 1975 மாச்சு.

4-30—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

### கச்சேரி, மன்னார்

மன்னார் வாடிவீட்டுக் காணியில் மேலதிகமாக மூன்று அறைகள் கட்டுவதற்காக பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், தொழிலாளர் சங்கங்களிடமிருந்து, மன்னார்க் கச்சேரி கேள்விச் சபையின் தலைவரினால் 1975 ஏப்பிரல் 18 ம் திகதி வெள்ளிக்கிழமைவரை கேள்விப் பத்திரங்கள் பொறுப்பேற்றுக் கொள்ளப்படும்.

2. மன்னார் கச்சேரியில் உதவி அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக் கொண்ட படிவங்களில் கேள்வி, இரு பிரதிகளில் தயாரிக்க வேண்டும். அவரிடமிருந்து தேவையான விபரங்கள், விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

3. மேற்படி 1 வது பந்தியில் குறிப்பிட்ட திகதிக்கும் நேரத்துக்கும் முன், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவு செய்யப்பட்ட அஞ்சல் மூலம் அல்லது மன்னார் கச்சேரியிலுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் சேர்ப்பிக்க வேண்டும்.

4. கேள்விப் பத்திர வைப்புப் பணம் ரூபா 25/- க்கான கச்சேரி பற்றுச்சீட்டை, 1975 ஏப்ரல் 17 ம் திகதி வியாழக்கிழமை வரை சமர்ப்பித்துக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அனுமதிக்கப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், தொழிலாளர் சங்கங்கள் வைப்புப்பணம் செலுத்தாது கேள்விப் பத்திரங்களை கோரலாம். ஆனால், அவர்கள் அப்படிக் கோரும்போது அந்தந்தச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்ட இலக்கம் மற்றும் விபரங்கள் காட்டப்பட வேண்டும்.

ந. ஜெயநாதன்,
மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர்.

கச்சேரி, மன்னார்,
1975 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 19 ம் திகதி.

4-29—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

### காணி அபிவிருத்தித் திணைக்களம்

மாத்தளை மாவட்டம்—கெற்றிபொல கிராம வைத்தியசாலையில் மின்பொறி நிறுவுவதற்கும், வழங்குவதற்குமான கேள்விப் பத்திரம்

மேற்குறிப்பிட்ட சேவைக்குரிய கேள்விப் பத்திரங்களை 1975.05.16 ந் திகதி முற்பகல் 11 மணிவரை காணி அபிவிருத்தி அதிபர் ஏற்றுக் கொள்வார். இருக்கும் சரக்கோ அல்லது இறக்குமதி—அல்லது வரவிருக்கும் சரக்கை விநியோகிப்பதற்கு கேள்வியாளர்கள் குறிப்பிடலாம்.

2. கேள்விப் பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 150/- இவ்வலுவலகத்தில் செலுத்தப்பட்டு, அதற்குரிய பற்றுச் சீட்டை 1975 ஆம் ஆண்டு மே மாதம் 15 ந் திகதி நண்பகல் 12 மணிவரை கொழும்பு 1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக் கூடிய படிவங்களில் இரு பிரதிகளில் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம். காணி அபிவிருத்தி அதிபரால் அனுமதிக்கப்படாத படிவங்களில் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் கவனிக்கப்படமாட்டாது.

3. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் "கெற்றிபொல வைத்தியசாலையில் மின்பொறி நிறுவுவதற்கும் வழங்குவதற்குமான கேள்விப் பத்திரங்கள்", எனக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1, என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடதுபக்கக் கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத் தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலமும் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப் பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப் பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப் பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவுடைய முன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும் மாற்ற முடியாதவையுமாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்பு நோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மீளப் பெற்றுக்கொள்ளக் கூடாது.

6. கேள்விக்காரர்கள் விநியோகம் சம்பந்தமான முழு விபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்றுக்கொண்ட விபரங்களில் ஏதாவது மாற்றமிருப்பின் அவ்வாறு குறிப்பிட்டுக்காட்ட வேண்டும்.

7. தேர்வுபெற்ற கேள்விக்காரர் விநியோகத்தில் தவறிழைப்பின் அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெற முடியாது தவறிய கேள்விக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

8. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 75.05.16 ந் திகதி முற்பகல் 11.15 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

9. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

10. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் மேற்பார்வைப் பொறியியலாளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
1975.03.24.
CT/2/369.

4-75—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு 5, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், அச்சாணிகள், சுரைகள், பட்டைவளையங்கள் (வாசர்கள்) முதலியவற்றை வழங்குவதற்கான பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை 1975.05.08 ஆந் தேதி மு.ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளுவார்.

1975.05.07 ஆந் தேதி நண்பகல் 12.00 மணிவரை எனது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் கேள்விகள் இரட்டைப் பிரதிகள் சமர்ப்பிக்கப்படவேண்டும். மீளளிக்கப்படமாட்டாத கேள்விப்பத்திரக் கட்டணம் 10/- ரூபாவைக் கொடுப்பனவு செய்து ஒரு தொகுதிக் கேள்விப்பத்திரப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மீளளிக்கப்படக்கூடிய கேள்விப்பத்திரக் கட்டுப்பணம் 100/- ரூபாவையும் தலைமை அலுவலகத்திலுள்ள இ.போ.ச. பிரதம கணக்காளர் உத்தியோகத்தரிடம் காசாகக் கட்டி அவ்விதம் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கேள்விப்பத்திரங்கள் வழங்குவதற்காக எனது அலுவலகத்தில் காட்டவேண்டும்.

மேலதிக விவரங்களை வேலை செய்யும் நேரங்களில் எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வர்த்தக முகாமையாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

வர்த்தகப் பகுதி,
200, கிருல வீதி,
கொழும்பு 5,
1975.03.20.

4–83 —04.40.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

## கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள்

ஆள்புல சிவில் பொறியியல் அமைப்பின் சப்பிரகமுவ பிரதேசத்தில், இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களில் உள்ள நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகங்களைச் சேர்ந்த வெற்றுச் சீமெந்து உறைகளும் வெற்றுத் தார்ப்பீப்பாக்களும் விலைக்குப் பெற்றுக் கொள்ளுதல் சம்பந்தமான 1975 ம் வருடத்திற்காக கோரப்பட்ட கேள்விப்பத்திர முடிபுகள்

1974 ம் ஆண்டு நொவம்பர் மாதம் 1 ம் திகதி வெளியிடப்பட்ட இலங்கைக் குடியரசின் வர்த்தமானியின் அறிவித்தலுக்கிணங்க கோரப்பட்ட கேள்விப்பத்திரங்கள் சம்பந்தமாக என்னால் எடுக்கப்பட்ட முடிவான தீர்மானங்கள் பின்வருமாறு :—

| வேலை | கேள்விப்பத்திர முடிவு திகதி | கிடைக்கப் பெற்ற கேள்விப்பத்திரங்களின் எண்ணிக்கை | ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப் பத்திரகாரர்களின் பெயரும் விலாசமும் | (*) ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப் பத்திர விலைகள் (ஒவ்வொரு) பெருள் பெறும் இடங்களையும் பொறுத்து பொருட்களைப் பெற்றுக் கொள்ளும் இடங்கள் 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி மாவட்டத்தில் நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகங்களைச் சேர்ந்த வெற்றுச் சீமெந்து உறைகள் விலைக்குப் பெற்றுக்கொள்ளலும் எடுத்துச் செல்லலும் | 74.03.03 .. | 07 | .. கே. ஆறுமுகம் இல. 47/1, 6 வது ஒழுங்கை, மூர்ச் லூசஸ் வீதி, கொழும்பு 13 | –/88 | –/80 | –/78 | –/78 |
| கேகாலை மாவட்டத்தில் நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகங்களைச் சேர்ந்த வெற்றுச் சீமெந்து உறைகள் விலைக்குப் பெற்றுக்கொள்ளலும் எடுத்துச் செல்லலும் | 74.12.03 .. | 08 | .. எச். எம். தகா, இல. 541, இனிகல, கட்டுகஸ்தோட்டை | –/91 | –/90 | –/88 | –/84 |
| இரத்தினபுரி கேகாலை மாவட்டங்களில் வெற்றுத் தார்ப்பீப்பாக்கள் விலைக்குப் பெற்றுக்கொள்ளுதலும் அவற்றை எடுத்துச்செல்லலும் | 74.12.03 .. | 12 | .. கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் யாவும் நிராகரிக்கப்பட்டு இது சம்பந்தமாக திரும்பவும் கேள்விப்பத்திரங்கள் கோரப்படும் | | | | |

(*) ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப்பத்திர விலைகள்.

1. நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம்.
2. 1 இல் இருந்து 10 மைல்களுக்குள் உட்பட்ட
3. 1 ல் இருந்து 10 மைல்களுக்கு மேற்பட்டதும் 20 மைல் தூர பிரமாணத்திற்காகவும்.
4. 1 ல இருந்து 20 மைல்களுக்கு மேற்பட்ட தூரப்பிரயாணம் உள்ளது.

கே. செல்வராசா,
வேலைகள் பணிப்பாளர்,
சப்பிரகமுவ பிராந்தியம்.

வேலைகள் பணிப்பாளர் அலுவலகம்,
சப்பிரகமுவ பிராந்தியம்,
1975 ம் ஆண்டு மார்ச்சு மீ 27 ந் உ.

4–27—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

## ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும்

அரச வடிசாலைகள் கூட்டுத்தாபனம்

1974 ம் ஆண்டு ஒற்றோபர் 25 ந் திகதி 135 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் அரச வடிசாலைகள் கூட்டுத்தாபனத்தினால் சாராயம் வழங்குவதற்காக பிரசுரிக்கப்பட்ட நியதிகளும் நிபந்தனைகளுக்குள் பின்வரும் நிபந்தனையும் சேர்க்கப்பட வேண்டும்.

அரச வடிசாலைகள் கூட்டுத்தாபனம் என்னும் சொற்றொடர் பொறிக்கப்பட்ட இரண்டு ரும் போத்தல்கள் 1975.4.1 திகதியிலிருந்து வழங்கப்படும். அவை அரச வடிசாலைகள் கூட்டுத்தாபனத்தின் சொத்தாகும். அத்துடன் அவை சாராயம் அடைப்பதற்கு மட்டுமே உபயோகிக்கப்படும். அரச வடிசாலைகள் கூட்டுத்தாபனம் என்ற சொற்றொடர்கள் பொறிக்கப்பட்டுள்ள இரண்டு ரும் போத்தல்கள் மட்டும் அல்லாமல் வேறு ரக போத்தல்கள் எதுவும் ஏதேனும் குதத்தில் ஏற்றுக் கொள்ளப்படவோ வழங்கப்படவோமாட்டாது.

பி. டப்ளிவ். பெரேரா,
தலைவர்,
அரச வடிசாலைகள் கூட்டுத்தாபனம்.

1975.3.24,
இலக்கம் 10,
வார்ட் இடம்,
கொழும்பு 7.

4–90—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்

01. 12.1968 தொடக்கம் அமுலுக்கு வந்தது

# "இலங்கைக் குடியரசு வர்த்தமானி"

வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரரே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. காரியாலய நேரம் மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 8.30 மணிமுதல் பி. ப. 2.45 மணிவரை நடைபெறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகல் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக டைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. விவாகப் பிரிவு விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புரொக்டரால்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 01 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 20 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 20 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | 220 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 440 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 01 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 01.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் :—

| இலங்கைக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் | 46 0 | 60 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு | 36 0 | 42 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் | 43 50 | 51 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | தபாற்செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | (i) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் | 0 50 | 0 20 |
| | (ii) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் | 1 0 | 0 20 |
| (ஆ) | (i) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் | 0 30 | 0 15 |
| | (ii) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் | 0 60 | 0 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக் கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்குத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப்போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை—1975**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| மார்ச் .. | .. வெள்ளி | 7.3.75 .. | 12 மதியம் | புதன் | 26.2.75 |
| | வெள்ளி | 14.3.75 .. | 12 மதியம் | புதன் | 5.3.75 |
| | வெள்ளி | 21.3.75 .. | 12 மதியம் | புதன் | 12.3.75 |
| | வியாழன் | 27.3.75 .. | 12 மதியம் | புதன் | 19.3.75 |
| ஏப்பிறல் .. | .. வெள்ளி | 4.4.75 .. | 12 மதியம் | செவ்வாய் | 25.3.75 |
| | வெள்ளி | 11.4.75 .. | 12 மதியம் | புதன் | 2.4.75 |
| | வெள்ளி | 18.4.75 .. | 12 மதியம் | புதன் | 9.4.75 |
| | வியாழன் | 24.4.75 .. | 12 மதியம் | புதன் | 16.4.75 |
| மே .. | .. வெள்ளி | 2.5.75 .. | 12 மதியம் | புதன் | 23.4.75 |
| | வெள்ளி | 9.5.75 .. | 12 மதியம் | புதன் | 30.4.75 |
| | வெள்ளி | 16.5.75 .. | 12 மதியம் | புதன் | 7.5.75 |
| | வெள்ளி | 23.5.75 .. | 12 மதியம் | புதன் | 14.5.75 |
| | வெள்ளி | 30.5.75 .. | 12 மதியம் | புதன் | 21.5.75 |
| ஜூன் .. | .. வெள்ளி | 6.6.75 .. | 12 மதியம் | புதன் | 28.5.75 |
| | வெள்ளி | 13.6.75 .. | 12 மதியம் | புதன் | 4.6.75 |
| | வெள்ளி | 20.6.75 .. | 12 மதியம் | புதன் | 11.6.75 |
| | வெள்ளி | 27.6.75 .. | 12 மதியம் | புதன் | 18.6.75 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
கொழும்பு,
1975 ம் ஆண்டு சனவரி மீ 01 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.